வளருவதற்கான இடம்



லியோன்

நவம்பர் 14 , வாரம் 7

குரோஷியா

1



- ✓ லியோன் முதன்முதலில் மருஷேவெக்கில் வேதாகம முகாமிற்குச் சென்றபோது அவனுக்கு ஏழு வயது. அவனுடைய பெற்றோர்களும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது இதே முகாமிற்குச் சென்றிருந்தார்கள். 1972 ஆம் ஆண்டு முதல் அந்த முகாம் நடந்து வருகிறது; குரோஷியா முழுவதும் உள்ள அட்வென்டிஸ்ட் குடும்பத்தினர் கோடைக்காலத்தில் அந்த முகாமில் கலந்துகொள்வது பாரம்பரியமாக நடந்துவருகிறது.
- ✓ லியோன் கலந்து கொண்ட அந்த முதல் வாரம் அனைத்தையும் மாற்றியது. “அங்கே 50 முதல் 100 சிறுவர்கள் இருந்தனர், ஒவ்வொரு நாளும் வேதவகுப்பும், பயிற்சிப் பட்டறைகளும், பாடல் பாடுதலும், புகைப்படம் எடுத்தலும், விளையாட்டுகளும் இருந்தன. ஒவ்வொரு நாளும் இரவு உணவிற்குப் பிறகு ஆராதனை நடைபெறும்” என்று சொல்கிறான்.
- ✓ ஆனால் அவனுக்கு அதிகம் பிடித்திருந்தது பேஸ்பால் விளையாட்டுதான். அது அமெரிக்க பேஸ்பால் போன்றதல்ல; குரோஷியாவில் விளையாடப்படுகிற ஒரு வகை பேஸ்பால். டென்னிஸ் பந்துகளால் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட தளங்களில் விளையாடுவார்கள், மைதானத்தில் கூடியிருப்பவர்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான ஒரு பாரம்பரியமாக அந்த விளையாட்டு நடைபெற்று வருகிறது.



- ✓ “ஒவ்வொரு நாள் மாலையும் ஒன்பது மணி வரை விளையாடுவோம், அதுதான் அந்த முகாமின் மிகமுக்கியமான விஷயம்!” என்று லியோன் கூறுகிறான்.
- ✓ ஒவ்வொரு வாரத்தின் நிகழ்ச்சிகளும் சிறுவர்களின் ஓய்வுநாள் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும். அச்சிறுவர்கள், பாடல்கள் பாடுவார்கள், நாடகங்கள் போடுவார்கள், தங்கள் பிள்ளைகள் கற்றுக்கொண்ட காரியங்களைப் பார்க்க வந்த பெற்றோருக்கான ஆராதனை விளக்கக்காட்சிகளைக் காட்டுவார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டும், அட்வென்டிஸ்ட் அல்லாத தங்கள் நண்பர்களையும் சிறுவர்கள் அங்கு அழைத்து வருவதுண்டு.
- ✓ கடந்த ஆண்டு, அந்த முகாமில் மூன்று இளைஞர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்; அதில், இரண்டு அட்வென்டிஸ்ட் இளைஞர்களும், விருந்தினராக வந்த ஒருவரும் அடங்குவர். அந்த முகாமில் வெறும் விளையாட்டுகள்மட்டும் நடப்பதில்லை. அங்கே விசுவாசத்தை செயலில் வெளிப்படுத்தினார்கள். அது லியோனின் இதயத்தில் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது.
- ✓ 2018 ஆம் ஆண்டில் மருஷேவெக்கில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் உடலியக்க மருத்துவப் படிப்பில் சேர்ந்தபோது, வேறு சில விஷயங்களும் மாறியிருந்தன.



- ✓ முந்தைய பதின்மூன்றாவது வார ஓய்வுநாள் காணிக்கையின் உதவியால் புத்தம் புதிய மாணவர் விடுதி அப்போதுதான் திறக்கப்பட்டிருந்தது. “அது மிகவும் தனித்துவமாகக் கட்டப்பட்டிருந்தது, சாவிகளால் அல்ல, அடையாள அட்டைகளால் கதவுகளைத் திறக்கிற நவீன வசதியுடன்கூடிய கட்டிடம். அது ஒரு ஹோட்டல்போல இருந்தது” என்று லியோன் கூறுகிறான்.
- ✓ பழைய விடுதியில் ஒவ்வோர் அறையில் நான்கு மாணவர்கள் தங்கலாம். புதிய விடுதியானது, ஓர் அறைகளில் இரண்டுபேர்மட்டுமே தங்குகிற வகையில் கட்டப்பட்டிருந்தது. புதிய அறைகளில் குளிர்சாதன வசதி, நவீன மரச்சாமான்கள் மற்றும் இரண்டு அறைகளுக்கு இடையே ஒரு பொதுவான குளியலறை ஆகியவை இருந்தன.
- ✓ அருகிலேயே கூடைப்பந்து மற்றும் கைப்பந்து மைதானங்கள் இருந்தன; இவை இயல்பாகவே நட்புகள் உருவாகும் இடங்களாக மாறின. லியோனின் தலைமுறையினருக்கு, அந்தப் புதிய விடுதி வெறும் ஒரு கட்டிடம் மட்டுமல்ல, அது ஒரு வீடாகவே இருந்தது. சில மூத்த மாணவர்கள் பழைய விடுதியின் நினைவுகளில் மூழ்கியிருந்தனர். ஆனால் புதிய விடுதியில் வளர்ந்தவர்களுக்கு, அது மாணவர் வாழ்க்கையின் மையமாக மாறியது. படிப்பதற்கும், சிரிப்பதற்கும், நம்பிக்கையைப்பற்றி பேசுவதற்கும் மற்றும் ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும் உரிய இடமாக அது விளங்கியது.



- ✓ தொழில்முறைப் பயிற்சிக்காக வந்த மாணவர்களும் ஒரு சொந்தபந்த உணர்வை அங்கே பெற்றுக்கொண்டார்கள். சிறுவனாக இருந்தபோது, லியோன் ஒருமுறை தனது ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியரிடம், “வார நாட்களில் நான் கற்செதுக்கும் கலைஞனாக வேலைசெய்யவும், ஓய்வுநாளில் போதகப்பணி செய்யவும் விரும்புகிறேன்” என்று கூறியிருந்தான்.
- ✓ ஆனால் உயர்நிலைப் பள்ளியில், அவனுக்கு விளையாட்டுகள், உடற்கூறியல் மற்றும் மனித உடல்குறித்து படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. இதனால் உடலியக்க மருத்துவம் படிப்பதே அவனுக்குச் சரியானதாகத் தோன்றியது. அந்தப் படிப்பை முடித்து, அடுத்தகட்ட உயர் கல்விக்குச் செல்லவும் நன்கு தயாராக இருந்தான்.
- ✓ ஆனாலும், லியோன் உயர்நிலைப் பள்ளியின் கடைசி ஆண்டில் இருந்தபோது, ஒரு பழைய எண்ணம் மீண்டும் மெதுவாக அவனுக்குள் எட்டிப்பார்த்தது. “அந்த எண்ணம் எப்போது உருவானது என்று தெரியவில்லை. ஆனால் நான் மீண்டும் போதகப் பணிபற்றி யோசிக்கத் தொடங்கினேன்” என்று சொன்னான்.
- ✓ அந்த எண்ணம் அவனை விட்டுப் போகவில்லை. அது மேலும் வளர்ந்தது. லியோன் தனது பேராசிரியர்களிடம் அதுபற்றிப் பேச ஆரம்பித்தான்.



- ✓ அதற்காக ஜெபித்தான், சிந்தித்துப் பார்த்தான். அவன் மருஷேவெக்கில் இறையியல் படிப்பில் சேர்ந்து, இளங்கலைப் பட்டத்தை முடித்தான். இன்று 24 வயதாகும் லியோனுக்கு திருமணமாகிவிட்டது, போதகர் பயிற்சி மாணவனாகப் பணியாற்றி வருகிறான்.
- ✓ ஆனாலும் அந்த வேதாகம முகாம்மட்டும் இன்னும் மறக்கமுடியாத ஒரு நினைவாகவே உள்ளது. கடந்த சில ஆண்டுகளில், மீண்டும் அங்கு சென்றான்; முதலில் சிறுபிள்ளைகளுக்கான ஒரு ஆலோசகராகவும், பின்னர் ஒரு வேதாகம ஆசிரியராகவும், அதன்பிறகு ஒரு விரிவுரையாளராகவும் சென்றான்.
- ✓ குரோஷியா மற்றும் ஸ்லோவேனியா முழுவதும் உள்ள பதின்மவயது சிறுவர்களுக்காக வார இறுதியில் நடத்தப்படுகிற 'டீன் கனெக்ட்' என்கிற ஆவிக்குரிய முகாமைத் தொடங்கவும் வழிநடத்தவும் உதவினான். ஏனெனில் அங்கு சிறுவர்களுக்காக பல திட்டங்கள் இருந்தபோதிலும், குறிப்பாக பதின்ம வயதினருக்காக மிகச்சில திட்டங்களே இருந்தன.
- ✓ "நாங்கள் எப்போதும் சமூகப்பணிச் செயல்பாடுகளையும் இதில் சேர்த்துக் கொள்கிறோம், முதியோர் இல்லங்களுக்குச் செல்வது, வளாகத்தைச் சுத்தம் செய்வது, மற்றும் ஆவிக்குரிய புத்தகங்களை விநியோகிப்பது போன்றவை அந்தத் திட்டங்களில் அடங்கும்" என்று கூறுகிறான்.